வேர்ட்ஸ்மித் சிகரம்

# SECONDARY 3 - EXAM REVISION WORKSHEETS - LEVEL 2 (PAPER 2)

## உயர்நிலை 3 - சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 10 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 11 - 20 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 21 - 30 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 31 - 40 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 41 - 50 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 51 - 60 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 61 - 70 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 71 - 80 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 81 - 90 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 91 - 100 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 101 - 110 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 110 - 120 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 121 - 130 |
| 14 | விடைத்தாள் | 131 - 150 |

# தேர்வுத்தாள் 1

/70

**‘அ’ பிரிவு**

**A1 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 ஆடவன் ஒருவன் தான் பணிபுரியும் முதலாளியின் வாகனத்தையே திருடிக்கொண்டு ______________________________ செய்தி அவ்வசிப்பிட மக்களை **அச்சுறுத்தியது**.

Q2 தேசிய அளவிலான தமிழ்மொழி புதிர்ப்போட்டியில் சிறந்த பங்கேற்பாளரைத் தேர்ந்தெடுக்க ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் அறிவாற்றலையும் ______________________________.

Q3 எப்போதும் விவாதத்தில் கெட்டி எனும் **அகம்பாவத்தோடு** ______________________________ பேசும் கபிலன் தன் தந்தையிடமே கைவரிசையைக் காட்டியதால் அப்பா அவனைச் சரமாரியாகக் கண்டித்தார்.

Q4 சங்கக் கால ___________________________ கலியுகத்தில் அதிகமாக மறக்கப்பட்டதால் மக்கள் தன்னிலை மறந்து இயந்திர வாழ்க்கை வாழ்கின்றனர்.

Q5 சரண் தன் கடந்தக் கால வாழ்க்கையின் நிலையைப் அறிந்திருந்தமையால் தனக்குத் தேவையானதைத் தவிர தன்னிடமுள்ள கூடுதல் பொருட்கள் அனைத்தையும் குழந்தைகள் காப்பகங்களுக்கு ______________________________.

| | | | |
|---|---|---|---|
| (A) | ஏனோ தானோமாக | (B) | ஓட்டம் பிடித்த |
| (C) | ஒரு கை பார்த்தார் | (D) | பழக்க வழக்கங்கள் |
| (E) | ஏட்டிக்குப் போட்டியாக | (F) | அள்ளிக் கொடுப்பான் |
| (G) | நடை உடைகள் | (H) | கம்பி நீட்டிய |
| (I) | அள்ளி இறைப்பான் | (J) | ஆழம் பார்த்தார் |

**A2 முன்னுணர்வு கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப்பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

பணம் ஈட்டுவது வாழ்க்கைக்கு **அத்தியாவசியம்** தான். ஆனால் பணமே வாழ்க்கை ஆகிவிடாது. இந்த உலகத்தில் பணத்தைவிட விலைமதிப்பற்றவை Q6. ______________________ இருக்கின்றன. அதில் **தலையாயது** அன்பு. அன்பை நாம் விலைகொடுத்து வாங்க இயலாது. அது விற்பனைக்கும் கிடைக்காது. அன்பினை உணரத்தான் முடியுமே Q7. ______________________ அதைப்பார்க்க இயலாது. நாம் நமது குடும்ப உறுப்பினர்களுக்கும் உற்ற நண்பர்களுக்கும் அவர்களின் பிறந்தநாளின்போது அன்பளிப்புகள் வாங்கித் தருவோம். சிலர் அவர்களுக்கு இன்ப அதிர்ச்சிகளைக் கொடுத்து மகிழ்ச்சியில் **திக்குமுக்காட** வைப்பார்கள். இவை யாவும் அன்பின் Q8. ______________________! அன்பு கண்டிப்பின் மூலமும் **பிரதிபலிக்கும்**.

பெற்ற பிள்ளைகள் தவறான வழியில் சென்றுவிடுவார்களோ என்ற பயத்தில் பெற்றோர்கள் பிள்ளைகளைக் கண்டிப்பதுண்டு. மாணவர்களின் Q9. ______________________ கொண்ட அக்கறையால் ஆசிரியர்கள் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதுண்டு. நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பான வசிப்பிடத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற கடமையுணர்வால் அரசாங்கம் பல கடுமையான சட்டத்திட்டங்களை Q10. ______________________. 'கோபமுள்ள இடத்தில்தான் குணமிருக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு. எனவே, அன்பு எந்த வடிவில் வந்தாலும், அது நம் நலனின்மீது மட்டுமே கண்ணாகயிருக்கும் என்பதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது.

| | |
|---|---|
| (A) விதித்துள்ளது | (B) போட்டுள்ளது |
| (C) வளர்ச்சியில் | (D) ஆனால் |
| (E) அதிகம் | (F) எவ்வளவோ |
| (G) ஒழிய | (H) அடையாளங்களே |
| (I) கல்விமேல் | (J) வெளிப்பாடுகளே |

## ‘ஆ’ பிரிவு

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பனுவல்களைக் கருத்தூன்றிப் படித்து அவற்றிற்குரிய வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எழுத்தை எழுதுக.**

**பனுவல் 1**

நன்னெறிக் கதைகள் 20

**நம்பிக்கையின் பலம்**

ஓர் அறையில், அன்பு, அறிவு, அமைதி மற்றும் நம்பிக்கை ஆகிய நான்கு மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன. அப்போது, திடீரென சன்னலின் வழியே **தென்றல் வீசு**கையில், “ஐயோ! தென்றலின் வீரியம் நம்மை **வென்றுவிடுமோ**?” என்று அன்பு, அறிவு, அமைதி ஆகிய மெழுகுவர்த்திகள் மிகுந்த அச்சத்தால் புலம்பிக் கூச்சலும் குழப்பமுமாகக் காணப்பட்டன. அவை எண்ணியதற்கேற்ப தென்றல் மூன்று மெழுவர்த்திகளையும் அணைத்தது. ஆனால், அதில் நம்பிக்கையெனும் மெழுவர்த்தி மட்டும் தென்றலின் சில நொடி **தழுவலை** எதிர்த்துப் போராடி வென்றது. அப்போது, அவ்வறையில் நுழைந்த சிறுவன் மற்ற மெழுவர்த்திகளைக் **கண்ணுற்று** சிந்திக்கையில் நம்பிக்கை எனும் மெழுகுவர்த்தியானது,

நன்னெறிக் கதைகள் 21

“வருந்தாதே! என்னைக் கொண்டு அவர்களைப் பற்ற வை தம்பி” என்றது.

எனவே, எப்படி நம்பிக்கையெனும் மெழுகுவர்த்தி தென்றலைச் சில நொடிகள் பொறுத்துக் கொண்டு நம்பிக்கையுடன் போராடி வென்றதோடு மற்ற மெழுகுவர்த்திகளுக்கும் ஒளி வழங்கியதோ அது போல நாமும் வாழ்வில் கணப்பொழுதும் நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். அதோடு, எச்சூழலிலும் **மனந்தளராமல்** எதிர்வரும் இடர்பாடுகளை எல்லாம் முழு நம்பிக்கையுடன் எதிர்த்துப் போராடினால் தடைகளைக் கடந்து வாழ்வில் வெல்லலாம் என்பது திண்ணம். மேலும், நாம் நம்பிக்கையுடன் செயல்பட்டால் நம் **சுற்றத்தாருக்கும்** நன்மையைப் பயக்கும்.

\- முற்றும் -

<u>வினாக்கள்</u>

Q11 இக்கதையில் ‘ஐயோ! தென்றலின் வீரியம் நம்மை வென்றுவிடுமோ’ எனும் உரையாடலில் ‘வென்றுவிடுமோ’ என்பது எதனை உணர்த்துகிறது?

(A) பலத்த காற்றினால் ஏற்படும் விளைவை

(B) பலத்த காற்றினால் மெழுகுவர்த்திகள் அணையும் நிலையை

(C) மூன்று மெழுகுவர்த்திகளும் தென்றலை நம்பிக்கையோடு எதிர்க்கும் நிலையை

(D) நான்கு மெழுகுவர்த்திகளும் காற்றைக் கண்டு அஞ்சியதை ( )

Q12 வாழ்வில் நம்பிக்கையோடு செயல்படுவதால் ஏற்படும் நன்மை யாது?

(A) பிறரது வாழ்வுக்கு ஒளி கொடுக்கலாம்

(B) எச்சூழலிலும் மனந்தளர்ந்து வெற்றி அடையலாம்

(C) வாழ்க்கை இடர்பாடுகளைச் சுலபமாக எதிர்கொள்ளலாம்

(D) வாழ்க்கைத் தடைகளையெல்லாம் வென்று சுற்றத்தாருக்கும் நன்மையளிக்கலாம்

( )

**பனுவல் 2**

**சிறுகதை எழுதுவோம்**

கமலா : வணக்கம் ஐயை. எனக்குச் சிறுகதை வாசிக்க மிகவும் பிடிக்கும். அதை எழுதவும் விருப்பப்படுகிறேன்.

ஆசிரியர் : கண்டிப்பாக எழுதலாம் கமலா. சிறுகதை என்பது நம் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களின் ஆழமான பார்வையே ஆகும். பொதுவாக மற்றவர்கள் காணத் தவறும் ஒன்றைச் சிறுகதை எழுத்தாளன் கண்டு, அனுபவித்து அதை உணர்ந்து எழுதுகிறான்.

கமலா : சிறுகதை எழுத நாம் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படை தகவல்கள் என்ன ஆசிரியை?

ஆசிரியர் : **கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது** என்பார்கள். அதுபோலதான் சிறுகதையும். இந்தச் சிறிய கதைகளும் **வாசகர்** மத்தியில் தாக்கங்களை ஏற்படுத்த வேண்டும். எழுதி முடித்த கதைக்கு இருக்கும், எழுதாத முன் கதையையும் பின்கதையையும் வாசகன் உணர்ந்து அதனை அவன் மனத்திற்குள் கொண்டுவந்து விரிவாக்கம் செய்யவேண்டும். அப்போதுதான் சிறுகதை எழுதிய எழுத்தாளருக்கு முழுமையான வெற்றி கிட்டியதாக அர்த்தம். நீயும் சிறுகதை எழுத முற்படும்போதும் இவையனைத்தையும் நினைவில் கொள்ள வேண்டும்.

கமலா : என்னைப் போன்ற புதிய சிறுகதை எழுத்தாளர்கள் சிறுகதையை எவ்வாறு எழுதத் தொடங்குவது என ஏதேனும் முன்னோடிகள் உண்டா?

ஆசிரியர் : குறிப்பிட்ட வழிமுறை என எதுவுமில்லை கமலா. ஆனால், என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறேன். சிறுகதைக்குப் பெரும் சம்பவங்களோ, தொடர் நிகழ்ச்சிகளோ தேவையில்லை. நம் வாழ்க்கையின் ஒரே ஒரு **கோணமும்** அதன் மூலம் வெளிப்படும் ஒரே ஓர் உணர்ச்சியும் அதற்குப் போதுமானது. சிறுகதை என்பது, சிறிய **துவாரத்தின்** வழியாக இந்த உலகைப் பார்ப்பதுபோல. அதற்குச் சிறுகதை எழுத்தாளன் கற்பனை வர்ணங்களைத் தீட்டி அழகு சேர்க்கிறான்.

கமலா : உங்கள் கருத்துகளை என்னோடு பகிர்ந்துகொண்டமைக்கு நன்றி ஆசிரியை.

<u>**வினாக்கள்**</u>

Q13 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' எனும் தொடர் மூலம் ஆசிரியர் உணர்த்தும் கருத்து யாது ?

(A) அளவில் சிறிய கடுகானது அதிக காரத்தை அளிக்கும்

(B) சிறுகதை அளவில் சிறியதாக இருந்தாலும் வாசகர்கள் மனத்தில் உணர்ச்சியை ஏற்படுத்தும்

(C) சிறுகதை சிறிய கதைகளைக் கொண்டு வாசகர்களை ஈர்க்கும்

(D) அளவில் சிறியதான சிறுகதை அதிக காரத்தைத் தரவல்லது ( )

Q14 சிறுகதை எழுதுவதற்கு எது அடிப்படையாக அமைகிறது?

(A) வாழ்க்கையின் பார்வையும் அதன் உணர்ச்சியும்

(B) சிறந்த கற்பனை வளம்

(C) வாழ்க்கையின் பெரும் சம்பவங்கள்

(D) சிறு துவாரப் பார்வை ( )

Q15 வாழ்க்கையைச் சிறு துவாரத்தின் வழி பார்த்து எவ்வாறு சிறந்த சிறுகதை எழுத இயலும்?

(A) பலக் கோணங்களில் சிந்தித்துக் கதை எழுத வேண்டும்

(B) வாழ்வியல் கூறுகளின் வழி உண்மைக் கதையை எழுதுதல் ஆகும்

(C) தன் பார்வையோடு கற்பனை வளத்தையும் இணைத்து எழுத வேண்டும்

(D) எழுதி முடித்த கதையின் வழி எழுதி முடிக்காதக் கதையைக் கூற வேண்டும் ( )



**B4 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் கோடிடப்பட்டுள்ள சொல் பிழையாக உள்ளது. அந்தப் பிழையான சொற்களைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்.**

| | |
|---|---|
| | நம் அன்றாட வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு கூறாக நெகிழி பயன்பாடு |
| | மாறிவிட்டது என்றால் அது மிகையாகாது. நாம் நாள்தோறும் பயன்படுத்தும் |
| Q16 | பெரும்பாலான பொருட்கள் அனைத்து நெகிழியால் செய்யப்பட்ட பொருள்களாவே |
| | அமைந்திருக்கின்றன. குறிப்பாகப், பொருள்களைக் கொண்டு செல்லப் பயன்படும் |
| Q17 | பைகள், உணவு பெட்டலங்கள், நம் உடைமைகள், வீட்டு அலங்காரப் பூக்கள், |
| | குழந்தைகள் பயன்படுத்தும் பொருள்கள் என எல்லாம் நெகிழிமயமாகவே |
| Q18 | திகழ்கின்றன. இன்று நெகிழிக்குத் தவிர்த்துவிட்டு வாழ முடியுமா என்று நம்மிடையே |
| Q19 | பெருங்கேள்வி எழுந்து பயமுறுத்துகிறது. மற்ற உலோகங்களை ஒப்பிடுவாறு நெகிழிப் |
| Q20 | பொருள்களை உருவாக்குவது மிகவும் மளிவாகவும் எளிதாகவும் இருக்கும். |
| | எடையின்றி இலகுவாக இருந்த நெகிழி காற்று, நீர், ஈரம் போன்ற வேதிப் |
| | பொருள்களால் பாதிக்கப்படாமல் நீண்ட நாள்கள் நிலைத்திருக்கும். மின்சாரக் |
| | கருவிகளும் மின்கசிவு ஏற்படாமல் பயன்படுத்தக் கூடிய இயல்பையும் நெகிழி |
| | பெற்றிருக்கிறது. ஆக, நெகிழி பலவாறாகப் பயன்படுகின்றது. |

Q16 ______________________

Q17 ______________________

Q18 ______________________

Q19 ______________________

Q20 ______________________

`இ' பிரிவு

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதையொட்டிய வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.**

நட்பு என்பது பதின்ம வயதினரிடையே இன்றியமையாத ஒன்றாக உருவெடுத்து **<u>வேரூன்றியும்</u>** விட்டது. குடும்பப் பந்தத்தைப் போலவே நட்பும் அவர்களின் வாழ்வில் ஒரு பிரிக்க முடியாத உறவாகிவிட்டது. அதைவிட, நட்பே சில சமயங்களில் அவர்களுக்கு இரத்த உறவுகளைவிட வலிமை மிக்கதாகவும் விளங்குகிறது. இதற்கு முக்கியக் காரணம், அவர்கள் வாழும் சூழலே ஆகும்.

இன்றையப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் நண்பர்கள் போல் பழக முற்படுகின்றனர். நாள் முழுதும் பெற்றோர்களின் **கண்காணிப்பிலேயே** பிள்ளைகள் வளர்கின்றனர். இதனால், இவர்களது பிள்ளைகளின் உணர்வுகளை அறிந்து வைத்துள்ளனர். இருப்பினும், தவிர்க்க முடியாத நிலைகளில் பெற்றோர்கள் பிள்ளைகளைவிட்டு அதிக நேரம் பிரிந்திருப்பது நண்பர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த இடங்கொடுக்கின்றது. இன்றைய காலத்தில் பிள்ளைகள் தங்கள் சுக துக்கங்களைப் பெற்றோர்களைக் காட்டிலும், நண்பர்களிடம் அதிகம் பகிர்ந்து கொள்கின்றனர். இதற்குப் பெற்றோர்களின் நேரமின்மையும் ஒரு முக்கிய காரணமாகிவிட்டது. பெற்றோர்களின் நேரமின்மையினால் குடும்பத்தில் **விரிசலும்** ஏற்பட்டுள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

நண்பர்கள் என்றுரைக்கும்போது அவர்கள் எல்லாரும் தீயவர்கள்தாம், தங்கள் பிள்ளைகளைக் கெட்ட வழிகளில் இட்டுச்செல்லக் கூடியவர்கள்தாம் என்று பெற்றோர்கள் உடனே முடிவெடுத்துவிடக் கூடாது. வள்ளுவரின் குறளுக்கொப்ப, உடுக்கையை இழந்த கைபோலத் துன்பம் வரும்பொழுது நொடிப் பொழுதும் **தாமதியாமல்** செயலாற்றும் தோழர்களும் இந்த நல்லுலகில் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் நண்பர்களின் நடத்தையில் அதிகம் அக்கறை கொண்டவர்கள். சுயநலம் கருதாது தம் சிநேகிதனின் நல்வாழ்வு ஒன்றிற்காகவே பாடுபடுபவர்கள். தோழமைக்கு என்றுமே தோள் கொடுக்கும் இவர்கள், தங்கள் நண்பனுக்கு ஒன்றென்றால் உயிரையும் கொடுக்கும் தன்மை வாய்ந்தவர்கள்.

ரோஜாச் செடியில் ஆங்காங்கே முட்கள் இருப்பது போன்று நல்ல நண்பர்கள் மத்தியில் கேடு நினைக்கும் தீயவர்களும் இருக்கவே செய்கிறார்கள். இவர்கள் முகமலர்ந்து மட்டுமே நட்புறவாடுவார்கள்; தங்கள் நலத்தைப் பற்றி மட்டுமே எண்ணுவார்கள். இவர்களின் தீய உள்ளம் அறிந்து **அரும்பிலேயே** இவர்களின் உறவை அறுத்துவிடுவது நலம் பயக்கும். 'உன் நண்பர்கள் யாரென்று சொல், நீ யாரென்று கூறுகிறேன்' என்கிறது அயல்நாட்டு வாசகமொன்று. அதாவது, நாம் யாருடனாவது நெருக்கமாகப் பழகினால் இயற்கையாகவே அவர்களின் இயல்பு, மொழிப் பயன்பாடு, பழக்க வழக்கம் போன்றவை ஒருவரை எளிதாகத் தொற்றிக் கொள்கிறது. இதனால், நண்பர்கள் இருவருமே ஒரே மாதிரியான குணம் கொண்டிருப்பர் என்கின்றன **மனோவியல்** ஆய்வுகள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, நல்ல நண்பர்களின் பண்புகளும் பழக்கங்களும்

நம்மைச் சேர்ந்தால் அது நமக்கும் உயர்வைத் தரும். ஆனால், நேர்மாறாக நடந்துவிட்டால் அது நம் வாழ்க்கையையே **சீரழித்து**விடும்.

**பதின்ம** வயதினருக்கு நல்லவற்றையும் தீயவற்றையும் **பகுத்து**ப் பார்க்கும் ஆற்றல் குறைவென்பதால், பெற்றோர்கள் அவர்களிடம் நல்ல நண்பர்களாகப் பழக வேண்டுவது அவசியம். பிள்ளைகளும் அப்போதுதான் தங்கள் பெற்றோர்களிடம் மனந்திறந்து பேசுவார்கள். பெற்றோர்கள் பிள்ளைகள் எதிர்நோக்கும் சிக்கல்களைச் சேர்ந்து **களைய** வழிகளைத் தேட வேண்டும். எல்லா நிலைகளிலும் நாங்கள் உள்ளோம் எனும் நம்பிக்கையைப் பிள்ளைகளுக்கு வழங்குவதோடு அவர்களது நிலையிலிருந்து சிந்திக்கப் பழக வேண்டும். இதன்வழியே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களுக்குச் நல்வழிகாட்ட இயலும்.

**வினாக்கள்**

Q21 பதின்ம வயதினர் நட்பை எவ்வாறு காண்கிறார்கள்? (4 மதிப்பெண்கள்)

___

___

___

___

WORDSMITH
BEYOND LEARNING

Q22 மேற்கண்ட பனுவலைப் படித்துவிட்டு ராஜுவும் ராணியும் கருத்துரைக்கின்றனர்.




(அ) ராணியின் கருத்துக்கு ஆதரவாக 2-ஆம் பத்தியிலிருந்து தக்க சான்றுகளைக் கண்டறிந்து எழுதுக. (2 மதிப்பெண்கள்)

___

___

___

___

(ஆ) ராஜூ ராணியின் கருத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளாதக் காரணத்தை 2-ஆம் பத்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதவும். (4 மதிப்பெண்கள்)

Q23 நல்ல நட்பு எப்படிப்பட்டது என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்? (4 மதிப்பெண்கள்)

WORDSMITH
BEYOND LEARNING
SKILLS = grades + achieve Big

Q24 ‘உன் நண்பர்கள் யாரென்று சொல், நீ யாரென்று கூறுகிறேன்’ என்னும் வாசகம் உணர்த்தும் பொருள் யாது? (5 மதிப்பெண்கள்)



Q25 பதின்ம வயதுப் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் எவ்வாறு நல்வழிகாட்ட இயலும்? (6 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q26 பத்தி 2-இல் ‘செல்வாக்கை’ என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

______________________________________

Q27 பத்தி 3-இல் தன்னை மட்டும் நேசித்தல் என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

______________________________________

WORDSMITH LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

பினவரும் சொற்கள் பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்த்தும் பொருளை எழுதவும்.

(3 மதிப்பெண்கள்)

Q28 வேரூன்றியும் - __________________________

Q29 சீரழித்து - __________________________

Q30 பகுத்து - __________________________

Q23 மேற்கண்ட பனுவலைப் படித்துவிட்டு லீலாவும் அமுதனும் கருத்துரைக்கின்றனர்.

பிள்ளைகளைப் பெற்றோர்கள் மிகத் தவறான முறையில் கட்டுப்படுத்துகின்றனர்.



லீலா அமுதன்

ஆமாம் லீலா, அதனால் பிள்ளைகளே அதிகம் துன்பப்படுவர்.

(அ) லீலாவின் கருத்துக்கு ஆதரவாக 2-ஆம் பத்தியிலிருந்து தக்க சான்றுகளைக் கண்டறிந்து எழுதுக. (3 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

WORDSMITH

(ஆ) அமுதனின் கருத்துக்கான காரணங்களை 2-ஆம் பத்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதவும். (3 மதிப்பெண்கள்)

SKILLS = JUMP grades + achieve Big

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q24 பெற்றோர்கள் துணைப்பாடத்தை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள்? அதனை அவர்கள் எவ்வாறு பார்க்க வேண்டும்? (5 மதிப்பெண்கள்)

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

Q25 திடமான மரத்திற்கும், தடம் மாறாத பிள்ளைகளுக்கும் உள்ள ஒற்றுமை என்ன? (4 மதிப்பெண்கள்)

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

Q26 பத்தி 1-இல் 'சரிசெய்ய' என்னும் பொருளை உணர்த்தும் சொல்லைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

______________________

Q27 பத்தி 2-இல் பிள்ளைகளின் சுட்டித்தனத்தை எந்தச் சொல் உணர்த்துகிறது என்பதைக் கண்டறிந்து எழுதவும். (1 மதிப்பெண்)

______________________

பின்வரும் சொற்கள் பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்த்தும் பொருளை எழுதவும். (3 மதிப்பெண்கள்)

Q28 பராமரிப்பதில் - ______________________

Q29 மிகையில்லை - ______________________

Q30 தடம் - ______________________

# வேர்ட்ஸ்மித் சிகரம்

## அருஞ்சொற்பொருள்
## உயர்நிலை 3 - சாதாரண நிலை
## தேர்வுப் பயிற்சித்தாள்
## (தாள் 2) - நிலை 2

# WORDSMITH SIGARAM

## ARUNSORPORUL
## SECONDARY 3 - EXAM REVISION
## WORKSHEETS - LEVEL 2
## (PAPER 2)

# SEC 3-O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 2
## உயர்நிலை 3 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2

## அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
| 1 | அச்சுறுத்தல் (அச்சுறுத்தியது) | பயமுறுத்துதல் | Frightening |
| 2 | அகம்பாவத்தோடு | திமிர் | Arrogance |
| 3 | தலையாயது | முக்கியமானது | Fundamental |
| 4 | திக்குமுக்காடுதல் (திக்குமுக்காட) | திணறுதல் | Stumbled |
| 5 | பிரதிபலிக்கும் | வெளிக்காட்டும் | Reflects |
| 6 | தென்றல் | தெற்கிலிருந்து வீசும் இதமான காற்று | Balmy breeze from south |
| 7 | தழுவல் (தழுவலை) | வீசுதல் / உரசல் | Blowing |
| 8 | கண்ணுற்று | பார்த்து | Looking at |
| 9 | மனந்தளராமல் | சோர்வடையாமல் | Without giving up |
| 10 | சுற்றத்தார் (சுற்றத்தாருக்கும்) | நம்மைச் சுற்றி இருப்பவர்கள் | Surrounded people |
| 11 | வாசகர் (வாசகர்கள்) | வாசிப்பவர் | Reader |
| 12 | கோணம் (கோணமும்) | திசை | Angle |
| 13 | துவாரம் (துவாரத்தின்) | சந்து | Hole |
| 14 | கண்காணிப்பு (கண்காணிப்பிலேயே) | நோட்டம் | Supervision |
| 15 | விரிசல் (விரிசலும்) | சிக்கல் | Problem |
| 16 | தாமதியாமல் | தள்ளிப்போடாமல் | Without Late |

| | | | |
|---|---|---|---|
| 17 | அரும்பிலேயே | ஆரம்பத்திலேயே | From the starting |
| 18 | மனோவியல் | மன ஆய்வியல் | Psychology |
| 19 | பதின்மம் (பதின்ம) | 11 - 19 வயதுடையவர் | Teenagers |
| 20 | களைதல் (களைய) | தீர்த்தல் | Solve |
| **தேர்வுத்தாள் 2** | | | |
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1 | பிரம்படி | தடியால் அடித்தல் | Beat with a cane |
| 2 | கருத்தாடல் | கலந்துரையாடல் | Discussion |
| 3 | பாரசீகம் | ஈரான் நாடு | Iran country |
| 4 | தன்னிகரற்ற | தனக்கு ஈடு இல்லாத | Matchless |
| 5 | சகாப்தம் (சகாப்தத்தை) | வரலாற்றில் கணக்கிடப்படும் காலக்கட்டம் | Era |
| 6 | நிறுவுதல் (நிறுவினான்) | தோற்றுவித்தல் | Establish |
| 7 | சூழ்ந்து (சூழ்ந்திருக்கின்றன) | சுற்றி | Surrounded |
| 8 | புலப்படவில்லை | தெரியவில்லை | Not visible |
| 9 | நியதி | தத்துவம் | Destiny |
| 10 | உத்வேகம் (உத்வேகத்தை) | உற்சாகம் | Excitement |
| 11 | தழுவு | எதிர்கொள் | Face / Experience |
| 12 | மாற்றுவழி | வேறு பாதை | Alternate way |
| 13 | பளு (பளுவை) | பாரம் | Burden |
| 14 | ஆன்றோர் | அறிஞர் | Nobel |
| 15 | அழுக்காறு | பொறாமை | Jealous |
| 16 | உரம் (உரத்தை) | பலம் | Strength |
| 17 | குன்றுதல் (குன்ற) | குறைதல் | Less |
| 18 | பயக்கும் | கொடுக்கும் | Grant |
| 19 | உமிழ்தல் (உமிழும்) | சிந்துதல் | Emanate |

# வேர்ட்ஸ்மித் சிகரம்

## விடைத்தாள்
## உயர்நிலை 3 - சாதாரண நிலை
## தேர்வுப் பயிற்சித்தாள்
## (தாள் 2) - நிலை 2

# WORDSMITH SIGARAM

## ANSWER SHEET
## SECONDARY 3 – EXAM REVISION
## WORKSHEETS - LEVEL 2
## (PAPER 2)

# SEC 3 - O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 2
## உயர்நிலை - 3 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2

## விடைகள்

**தேர்வுத்தாள் 1**

**A1 மரபுத்தொடர்களும் இணைமொழிகளும்**

| | | |
|---|---|---|
| Q1 | கம்பி நீட்டிய | (H) |
| Q2 | ஆழம் பார்த்தார் | (J) |
| Q3 | ஏட்டிக்குப் போட்டியாக | (E) |
| Q4 | பழக்க வழக்கங்கள் | (D) |
| Q5 | அள்ளிக் கொடுப்பான் | (F) |

**A2 முன்னுணர்வு கருத்தறிதல்**

| | | |
|---|---|---|
| Q6 | எவ்வளவோ | (F) |
| Q7 | ஒழிய | (G) |
| Q8 | வெளிப்பாடுகளே | (J) |
| Q9 | கல்விமேல் | (I) |
| Q10 | விதித்துள்ளது | (A) |

**B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

Q11 B
Q12 D
Q13 B
Q14 A
Q15 C

**B4 பிழை திருத்தம்**

Q16 அனைத்துமே
Q17 பொட்டலங்கள்
Q18 நெகிழியைத்
Q19 ஒப்பிடுகையில்/ஒப்பிடும்போது
Q20 மலிவாகவும்

WORDSMITH BEYOND LEARNING EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG